தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044 – 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்
*******

ஆணை எண் 183/ந/2023
நாள் 24.08.2023

திரு. மதுரை பாரூக் அஹமத்
வாணியம்பாடி,
திருப்பத்தூர் மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

ஆணையாளர்,
வாணியம்பாடி நகராட்சி,
திருப்பத்தூர் மாவட்டம். – எதிர் மனுதாரர்

திருப்பத்தூர் மாவட்டம், வாணியம்பாடி காதர்பேட்டை, படேல் காசிம் வீதி, ஆயிஷா மன்ஜில், எண்.603 என்ற முகவரியில் வசிக்கும் திரு. மதுரை பாரூக் அஹமத் என்பவரின் 12.06.2023 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 13.06.2023 அன்று பெறப்பட்டு 183/ந/2023 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மேற்கண்ட மனு மீது தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தால் உரிய விசாரணை மேற்கொள்ளப்பட்டு அதன் அடிப்படையில் பரிசீலனை செய்யப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

ஆணை

திருப்பத்தூர் மாவட்டம், வாணியம்பாடி காதர்பேட்டை, படேல் காசிம் வீதி, ஆயிஷா மன்ஜில், எண்.603 என்ற முகவரியில் வசிக்கும் திரு. மதுரை பாரூக் அஹமத் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள தனது புகார் மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:-

i. "It is humbly submitted that the Vaniyambadi Municipality owns a weekly market with a measuring of 7 Acres and 71 Cents comprised at Mohamed Ali Jinnah Road Khaderpet Vaniyambadi Pin – 635 751 in Tiruppathur District.

ii. This was whether so the aforesaid weekly market was regularly leased to private individuals annually where vegetable market on daily basis and cattle market on weekly basis is functioning since a long period of more than five decades.

iii. The matrix stood so some anti social elements anarchically occupied a part of the weekly market and had erected an auto stand and parking their autos regularly 24 hours on daily basis and indulging in various arbitrary acts of

moral turpitude which causes unbearable mental agony and great hardship to the innocent public in large.

iv. Hence to authenticate the occupation of the said place by the auto owners this petitioner on 14.05.2021 filed an application under Right to Information Act 2005 before The Public Information officer Vaniyambadi Municipality.

v. In reply to the above R.T.I application, the Public Information Officer held that neither Vaniyambadi Municipality had issued any notification for leasing the above property nor had leased and allowed any one to park their autos and in further the auto owners had illegally encroached the said place and parking their vehicles regularly without paying any rent to vaniyambadi Municipality thereby causing huge wrongful loss to Government exchequer.

vi. The matrix stood so on enquiring the matter this petitioner was shocked to knew that the Municipal officials are not unaware of these malpractices and deception but ignoring the same some black sheep of Vaniyambadi Municipality translate this illegal occupation to a income for their own and they collect kickbacks from the auto owners and turned Nelson's eye on that and had allowed them to erect an auto stand and park their vehicle without paying a single coin towards rent to Municipality.

vii. It is pertinent to state here that in the above illegal auto stand with a minimum of 50 autos were parked daily, at the same time presently in Vaniyambadi Town Private parking stand owners charge Rs.100/- towards rent for each auto for a period of 12 hours and if the above charging tariff is followed for the above illegal auto stand. The Vaniyambadi Municipality may probably loose a revenue of Rs.5,000/- per day and on annual calculation it amounts to Rs.18,25,000/- which is most unfortunate.

**viii. It is further submitted that Vaniyambadi Municipality is faltering in the economic crisis and to recover it from this dilemma it is most necessary to initiate appropriate action to generate the revenue from their properties and other sources. Hence it is imperative of time to evict the illegal auto stand immediately and in lieu of that Vaniyambadi Municipality may itself erect an auto stand at that site by fixing a reasonable charge for parking autos and other vehicles in that site and increase its revenue.**

ix. Unless an order directing the respondents to evict the illegal auto stand comprised at Weekly Market campus, Mohamed Ali Jinnah Road, Khaderpet Vaniyambadi in Tiruppathur District and consequently directing the respondent to **erect a parking stand at that site by them and fix a reasonable charge for parking each auto and other vehicles in that site to increase the Municipal revenue** is passed the Vaniyambadi Municipality would put be into irrepairable loss and great hardship.

Under these circumstances it is humbly prayed that this Tamil Nadu Local Bodies Ombudsman may be pleased to pass a rigid order directing the respondent to evict the illegal auto stand immediately comprised at Weekly Market campus,

Mohamed Ali Jinnah Road, Khaderpet Vaniyambadi in Tiruppathur District and consequently direct the second respondent to erect a parking stand at that site and fix a reasonable charge for parking each auto and other vehicles in that parking stand and pass such other further orders as this Tamil Nadu Local Bodies Ombudsman may deem fit and proper in the fact and circumstances of the case and render justice.

(2) மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 03.07.2023 நாளிட்ட அறிவிப்பு மூலம் வாணியம்பாடி நகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.

(3) இதற்கிடையில் மனுதாரர் திரு.மதுரை பாருக் அஹமத் தனது 28.07.2023 நாளிட்ட கடிதத்தில் இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்த புகார் மனுவினை திரும்பப் பெறுவதாக கீழ்க்காணுமாறு தெரிவித்துள்ளார்.

i. I had lodged a complaint before this Honorable Tamil Nadu Local Bodies ombudsman with a prayer to direct the respondent to evict the illegal auto stand immediately comprised at Weekly Market campus, Mohamed Ali Jinnah Road, Khaderpet Vaniyambadi in Tiruppathur District and consequently direct to erect a parking stand at that site and fix a parking for autos and other vehicles.

ii. The matrix stood so the respondent by a letter dated 27.07.2023 informed this complainant that construction of shopping complex in the campus of the aforesaid weekly market is in progress and space with some extent has left in the weekly market complex to facilitate the general public to park their vehicles in that space.

   a. Meanwhile auto drivers who come to the adhering Agriculture Market (உழவர் சந்தை) to pick and drop passengers, park their vehicles constantly in the aforesaid place, and on receipt of the complaints from public parking of autos in the weekly market has been prohibited and action will be taken to erect a parking stand after completion of the construction of the shopping complex.

iii. It is humbly submitted that from the above submission made by the second respondent it is imperative to dispose the present complaint because no useful purpose would be served on proceeding the complaint. Hence this complainant desirous to withdraw the complaint No. 183/ந/2023.

iv. Under these circumstances it is humbly prayed that this Honorable Tamil Nadu Local Bodies Ombudsman may pleased to record this and grant leave to withdraw the complaint No. 183/ந/2023 and consequently dispose the same in fructuous and pass such other further order as this Honorable Tamil Nadu Local Bodies Ombudsman may deem fit and proper in the facts and circumstances of case and thus render justice" என தெரிவித்துள்ளார்.

(4) இம்முறைமன்ற நடுவத்தால் கோரப்பட்டவாறு வாணியம்பாடி நகராட்சி ஆணையாளர் தனது 27.07.2023 நாளிட்ட அறிக்கையில் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்.

"வாணியம்பாடியில் இருசக்கர வாகனத்திற்கு மட்டும்தான் வாகனம் நிறுத்தும் இடம் உள்ளது. தனியார் ஆட்டோ நிறுத்தம் எங்கும் இல்லை. தனியார் ஆட்டோ நிறுத்தும் இடத்தில் 12 மணி நேரத்திற்கு ரூ.100/- வசூலிக்கிறார்கள் என்பது முற்றும் தவறான தகவலாகும். நகராட்சிக்கு சொந்தமான வாரச்சந்தையில் சட்ட விரோதமாக நிறுத்தப்படும் ஆட்டோக்களால் நகராட்சிக்கு தினமும் ரூ.5,000/- மற்றும் வருடத்திற்கு ரூ.18,25,000/- இழப்பு ஏற்படுகிறது என்பது ஏற்புடையதல்ல.

வாணியம்பாடி நகராட்சிக்கு சொந்தமான வாரச்சந்தை மைதானத்தில், உழவர் சந்தையும் இயங்கி வருகிறது. உழவர் சந்தைக்கு தினமும் காய்கறிகளை ஏற்றிக்கொண்டு வரும் விவசாயிகள் ஆட்டோ மூலம்தான் கொண்டு வருகிறார்கள். அவ்வாறு காய்கறி கொண்டு வரும் ஆட்டோக்கள் மற்றும் வாகனங்களை வாரச்சந்தை மைதானத்தின் ஓரத்தில் பொது மக்களுக்கு எவ்வித இடைஞ்சலும் ஏற்படாமல் நிறுத்தி வைத்து காய்கறி விற்பனை செய்த பின்னர் வாகனங்களை எடுத்து சென்றுவிடுவார்கள். விவசாயிகள் உழவர் சந்தைக்கு காய்கறிகள் கொண்டு வரும் ஆட்டோக்கள் மற்றும் வாகனங்களை நிறுத்தி சென்றிருந்ததை ஒரு சில ஆட்டோ டிரைவர்கள் தங்கள் இஷ்டத்திற்கு ஆட்டோ நிறுத்தம் என்று பெயர் பலகை வைத்து இருந்தார்கள்.

புகார்தாரர் நகராட்சிக்கு தகவல் அறியும் உரிமைச்சட்டப்படி மனு அளித்தபோதே அங்கு ஆட்டோ நிறுத்தியவர்களை காலி செய்யச் சொல்லி அப்புறப்படுத்தப்பட்டது. இருப்பினும், சட்டம் ஒழுங்கு பிரச்சனை காரணமாக உடனடியாக காலி செய்ய இயலவில்லை. தற்போது தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகளின் முறைமன்றத்தில் இருந்து நோட்டீஸ் வரப்பெற்றவுடன் வாணியம்பாடி நகராட்சி எல்லைக்குட்பட்ட வாரச்சந்தை மைதானத்தில் அங்கீகரிக்காமல், சட்ட விரோதமாக வைக்கப்பட்டிருந்த ஆட்டோ நிறுத்த பெயர் பலகையையும், அங்கு இருந்த ஆட்டோக்களையும் அப்புறப்படுத்திவிட்டோம். இனி வரும் காலங்களில் வாரச்சந்தை மைதானத்தில் விவசாயிகளின் காய்கறி வாகனங்கள் தவிர இதர வாகனங்களை நிறுத்தம் செய்வதை தடுக்க தொடர் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் வாரச்சந்தை மைதானத்தில் உழவர் சந்தை இயங்கி வருவதால் விற்பனைக்காக வாகனங்களில் காய்கறி கொண்டு வரும் விவசாயிகள் பாதிக்கப்படுவார்கள் என்பதாலும் அவ்விடத்தில் விவசாயிகள் கொண்டு வரும் ஆட்டோக்கள் மற்றும் வாகனங்கள் மட்டும் நிறுத்தம் செய்யப்படுகிறது என்பதையும், இதனால் நகராட்சிக்கு வருவாய் நிதி இழப்பு எதுவும் ஏற்படவில்லை என்பதையும் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

(5) மனுதாரரும் மற்றும் வாணியம்பாடி நகராட்சி ஆணையரும் 17.08.2023 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 02.08.2023 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

(6) மனுதாரர் திரு. மதுரை பாரூக் அகமத் 17.08.2023 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.

"திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி நகராட்சிக்கு சொந்தமான வாரச்சந்தை மைதானத்தில் நகராட்சியின் அனுமதி இல்லாமல் ஆட்டோக்கள் நிறுத்துவது குறித்து நகராட்சி அலுவலகத்தில் என்னால் புகார் மனு அளிக்கப்பட்ட நிலையில், மேற்கண்ட இடத்தில் ஆட்டோக்கள் ஏதும் நிறுத்தப்படவில்லை. மேலும், மேற்கண்ட வாரச்சந்தை நடைபெறும் இடம் இனிமேல் ஆட்டோக்கள் நிறுத்துமிடமாக செயல்படாது எனவும், அங்கு ஆட்டோக்கள்

நிறுத்தாவண்ணம் தொடர் நடவடிக்கை எடுக்கப்படும் என நகராட்சியால் உறுதி அளித்ததன் பேரில் இம்முறை மன்றத்தில் என்னால் சமர்ப்பிக்கப்பட்ட எனது 12,6,2023 நாளிட்ட புகார் மனுவை திரும்பப் பெற்றுக்கொள்கிறேன் என இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

(7) எதிர்மனுதாரரான வாணியம்பாடி நகராட்சி ஆணையராக பணிபுரியும் திரு.B.சதீஷ்குமார் என்பவர் 17.08.2023 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.

''திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி நகராட்சிக்கு சொந்தமான வாரச்சந்தை மைதானத்தில் நகராட்சியின் அனுமதி இல்லாமல் ஆட்டோக்கள் நிறுத்துவது குறித்து நகராட்சிக்கு மனுதாரரால் புகார் மனு அளிக்கப்பட்ட நிலையில், மேற்கண்ட இடம் ஆய்வு செய்யப்பட்டது. வாணியம்பாடி நகராட்சியில் நடைபெறும் வாரச்சந்தை மைதானத்தில் உழவர் சந்தையும் இயங்கி வருகிறது. காய்கறிகளை கொண்டு வரும் விவசாயிகள், ஆட்டோ போன்ற வாகனங்களில் ஏற்றிக்கொண்டு வருகின்றனர். மேலும் அங்கு வரும் பொதுமக்களும் ஆட்டோக்களை பயன்படுத்தி அங்கு வந்து செல்கின்றனர். மனுதாரரின் புகார் மனுவைபொட்டி வாரச்சந்தை நடைபெறும் இடத்தில் ஆட்டோக்கள் நிறுத்துவது நகராட்சியால் தடுக்கப்பட்டுள்ளது. இனி வருங்காலங்களில் அங்கு ஆட்டோக்கள் நிறுத்தாதவாறு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்கின்ற விவரத்தை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் இம்முறை மன்றத்தில் என்னால் சமர்ப்பிக்கப்படும் எனது 27.07.2023 நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

(8) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம், வாணியம்பாடி நகராட்சி ஆணையரின் விளக்க அறிக்கை, வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

திருப்பத்தூர் மாவட்டம், வாணியம்பாடியைச் சேர்ந்த மனுதாரர் திரு. மதுரை பாரூக் அஹமத் என்பவர் தனது 12.06.2023 நாளிட்ட மனுவில் வாணியம்பாடி நகராட்சிக்கு சொந்தமான வாரச்சந்தை மைதானம் நகராட்சியின் அனுமதியில்லா ஆட்டோ வாகனங்கள் நிறுத்தும் இடமாக செயல்பட்டு வருவதாக புகார் தெரிவித்து, அதற்கான உரிய கட்டணம் நகராட்சியால் நிர்ணயம் செய்யப்பட வேண்டும் எனக்கோரியுள்ளார்.

மேற்காணும் புகார் குறித்து மனுதாரர் வாணியம்பாடி நகராட்சியில் புகார் அளித்தும் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படாத நிலையில் இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்த புகார் குறித்து நகராட்சி ஆணையாளரின் அறிக்கையை கோரியபோது, வாரச்சந்தை மைதானத்தில் வைக்கப்பட்டிருந்த ஆட்டோ பலகையையும் அகற்றி, அவ்விடத்தில் ஆட்டோ வாகனங்கள் நிறுத்தப்படாமல் இருக்கும் வகையில் நடவடிக்கையும் எடுக்கப்பட்டு, நகராட்சியின் 27.07.2023 நாளிட்ட கடிதத்தின் மூலம் மனுதாரருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன் தொடர்ச்சியாக மனுதாரர் தனது புகார் மனுவினை திரும்பப் பெற்றுள்ளார்.

இவற்றின் மூலம் மனுதாரரால் புகார் அளிக்கப்படும் முன்பே, வாரச்சந்தை மைதானம் ஆட்டோ வாகனங்கள் நிறுத்துமிடமாக செயல்பட்டு வந்ததையும், மனுதாரர் புகார் அளித்த பின்பே, வாகன நிறுத்துமிடம் அகற்றப்பட்டது என நகராட்சி ஆணையாளரின் அறிக்கை மற்றும்

வாக்குமூலம் வாயிலாக தெரிய வருகிறது. நகராட்சி ஆணையாளரின் இத்தகைய பொறுப்பற்ற செயலினை இம்முறைமன்ற நடுவம் வன்மையாகக் கண்டிக்கிறது. இனி வருங்காலங்களில் இதுபோன்று பொது மக்களிடமிருந்து பெறப்படும் கோரிக்கைகள் / மனுக்களின் மீது உரியகாலத்தில் நடவடிக்கை எடுக்குமாறும் மற்றும் வாரச்சந்தை மைதானத்தில் பொதுமக்களுக்கு போக்குவரத்து இடையூறு ஏற்படா வண்ணம் வாகனங்கள் ஆக்கிரமிப்பு செய்யாதிருப்பதை உறுதி செய்திடுமாறு வாணியம்பாடி நகராட்சி ஆணையாளரை அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

The DMA is directed to pull up the Commissioners and the field officials responsible for this delinquency, carelessness and negligence in discharging their duties strictly. Their inaction till the complaint is registered betrays the complicity and collusion of the delinquent officials of the Vaniyambadi Municipality.

2023 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 24–ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திரு. மதுரை பாரூக் அஹமத்,
நெ.603, ஆயிஷா மன்ஜில், பட்டேல் காசிம் வீதி,
வாணியம்பாடி – 635 751, திருப்பத்தூர் மாவட்டம்.

2) ஆணையாளர், வாணியம்பாடி நகராட்சி,
வாணியம்பாடி, திருப்பத்தூர் மாவட்டம்.

3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகர் நிர்வாக அலுவலக வளாகம், நெ.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.

4) இணை இயக்குநர் /ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
நகர் நிர்வாக அலுவலக வளாகம், நெ.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28. (பெயரிடப்பட்ட உறையில்)

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்.

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளர்
25/8/23

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் சென்னை 600 032